உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 09.05.2026 • மலர் 04 • இதழ்: 129 • Edition : Nagercoil • 09.05.2026 • Vol : 04 • Issue : 129 • Page : 4 • Rs. 5/-

### புதிய அரசு இன்னும் அமையாததால்

# ஆளுநர் கட்டுப்பாட்டில் ஆட்சி வந்தது

## தலைமைச்செயலாளர், டிஜிபியை அழைத்து ஆலோசனை



சென்னை, மே. 9

தமிழக சட்டமன்றம் கலைக்கப்பட்டதன் எதிரொலி மற்றும் தேர்தல் முடிவு தெரிந்து 4 நாட்கள் ஆகியும், எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத காரணத்தில், தமிழக ஆளுநர் அர்லேகர் கட்டுப்பாட்டில் தற்போது ஆட்சி நடந்து வருகிறது. பெரும்பான்மை நிரூபிக்க முடியாததால், விஜய்யால் இன்னும் ஆட்சி அமைக்க முடியவில்லை. மெஜாரிட்டிக்கு தேவையான 6 எம்எல்ஏக்களை பெற பல்வேறு முயற்சிகளை விஜய் தரப்பினர் செய்து வருகிறார்கள். இந்த பரபரப்பான சூழ்நிலையில், தமிழக ஆளுநர் அர்லேகர் நேற்று மாலைதமிழகதலைமை செயலாளர் சாய்குமார் மற்றும் டிஜிபி சந்தீப்ராய் ரத்தோர் ஆகியோரை கவர்னர் மாளிகைக்கு அழைத்து ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனையின் போது, தமிழகத்தில் தற்போது யாரும் ஆட்சி அமைக்கும் அளவுக்கு தனி மெஜாரிட்டி இல்லை. இப்போதுள்ள நிலையில், தமிழகத்தில் முதல்வர், அமைச்சர்கள் இல்லை. அதனால் புதிய ஆட்சி அமையும் வரை, அனைத்து பணிகளும் தனது பார்வையின் கீழ் தான் நடைபெற வேண்டும்.

குறிப்பாக தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்னை ஏற்படாமல் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபற்றிய அறிக்கைகளை தினசரி தனக்கு வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு ஆலோசனைகளை வழங்கியுள்ளார். தேர்தல் முடிந்ததை ஒட்டி 16வது சட்டமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. புதிய எம்எல்ஏக்கள் தேர்வு செய்யப்பட்டு 4 நாட்கள் ஆகியும், முழு மெஜாரிட்டியுடன் யாரும் தமிழகத்தில் ஆட்சி அமைக்க முன்வரவில்லை. இதனால், தற்போது தமிழகத்தில் ஆளுநர் கட்டுப்பாட்டில் தான் ஆட்சி நடைபெறுவதாக கருதப்படுகிறது. இதனால் தான், தலைமை செயலாளர் மற்றும் தமிழக டிஜிபி ஆகியோரை ஆளுநர் அழைத்து பேசியுள்ளார்.

## பெரும்பான்மையுடன் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பு த.வெ.க.வுக்கு மட்டுமே உள்ளது

### சி.பி.எம். பொதுச்செயலாளர் கருத்து



புதுடெல்லி, மே. 9

தமிழகத்தில் தேர்தல் முடிவுகள் மே 4ம் தேதி வெளியானநிலையில் எந்த அரசியல் கட்சிகளுக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் புதிய அரசு அமைப்பதில் தொடர்ந்து சிக்கல் நீடித்து வருகிறது.

தேர்தலில் 108 இடங்களில் வெற்றி பெற்ற த.வெ.க.வுடன் காங்கிரஸ் கட்சி கூட்டணி அமைத்துள்ள நிலையில், பெரும்பான்மைக்கு தேவையான ஆதரவை பெறுவதற்கு வி.சி.க., கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு த.வெ.க. அழைப்பு விடுத்துள்ளது. இது குறித்து முடிவு செய்ய சம்பந்தப்பட்ட கட்சியினர் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், பெரும்பான்மையுடன் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பு த.வெ.க.வுக்கு மட்டுமே உள்ளது என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் தேசிய பொதுச்செயலாளர் எம்.ஏ.பேபி கருத்து தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது;

“அ.தி.மு.க.வுக்குத் தேவையான ஆதரவு கிடைக்கப் போவதில்லை. ஏனென்றால் மக்கள் வாக்களித்து குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சட்டமன்ற உறுப்பினர்களை தேர்வு செய்துள்ளனர். மக்கள் தீர்ப்புக்கு மதிப்பளிக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களை வேறு எங்கிருந்தும் வரவழைக்க முடியாது.

விஜய்யை ஆட்சி அமைக்க கவர்னர் அழைப்பதை உறுதிசெய்வதற்கு வி.சி.க., கம்யூனிஸ்ட் கட்சிகள் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். எங்கள் மதிப்பீட்டின்படி, சட்டமன்றம் கூடும்போது பெரும்பான்மையுடன் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பு த.வெ.க.வுக்கு மட்டுமே உள்ளது."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளது.

## தமிழ்நாட்டில் புதிய அரசை அமைப்பதற்கான எந்தவொரு முயற்சியிலும் பாஜக இணையாது

### நயினார் நாகேந்திரன் பேச்சு



சென்னை, மே. 9

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாட்டு மக்களின் நலன் மற்றும் முன்னேற்றத்திற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள பாரதிய ஜனதா கட்சி அதே நோக்கத்துடன் சட்டமன்ற தேர்தலிலும் களம் கண்டது இருப்பினும், தேர்தல் முடிவுகளை கட்சியானது, மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறது. மேலும், தமிழ்நாட்டில் ஆட்சி அமைப்பதற்கான எந்தவொரு வாய்ப்பினையும் அதிகாரத்தையும் மக்கள் பாரதிய ஜனதா கட்சிக்கு இந்த தேர்தலில் வழங்கவில்லை என்று கருதுகிறோம்.

தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்தையும் தேர்தல் முடிவுகளையும் நாங்கள் உளமார மதிக்கிறோம். எனவே தமிழக பாரதிய ஜனதா கட்சியானது, தமிழ்நாட்டில் புதிய அரசை அமைப்பதற்கான எந்தவொரு முயற்சியிலும் தன்னை இணைத்துக்கொள்ள விரும்பவில்லை.

ஆட்சி அமைக்கும் எவ்வித முயற்சியிலும் கட்சியானது எவ்வித நேரடிப் பங்களிப்பையும் மேற்கொள்ள விரும்பவில்லை.

மேலும், ஆட்சி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள எந்தவொரு கட்சிக்கும் நாங்கள் வாக்களிக்க மாட்டோம் என்பதையும் மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கவர்னர் ஆட்சியை திணிக்க பாஜக முயற்சி: சிந்தனை செல்வன்



சென்னை, மே. 8

தமிழ்நாட்டில் எந்த கட்சிக்கும் பெரும்பான்மை இல்லாததால், யார் ஆட்சி அமைக்கப் போகிறார்கள் என்ற பரபரப்பான சூழல் நிலவி வருகிறது. தவெகவுக்கு பெரும்பான்மை கிடைக்காததால், திமுக கூட்டணி கட்சிகளிடம் ஆதரவு கோரியுள்ளது. விசிக, கம்யூனிஸ்ட் கட்சிகள் தங்களது நிலைப்பாட்டை விரைவில் அறிவிக்க உள்ளன.

விசிக சிந்தனை செல்வன் தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

தமிழகத்தில் கொல்லைப்புறவழியாக கவர்னர் ஆட்சியை திணிக்க பாஜக முயற்சி. தமிழக மக்கள்விழிப்பாக இருக்க வேண்டும். தேர்தலுக்கு பிந்தைய அசாதாரண சூழலை கையாளுவதில் தவெக தலைவர் விஜய் தடுமாறிப்போய் இருக்கிறாரா அல்லது அவருடன் இருக்கும் இரண்டாம் கட்டத்தலைவர்கள் அவரை தவறாக வழி நடத்துகிறார்களா என கேள்வி எழுகிறது.

ஆட்சி அமைப்பதற்கான அறுதிப்பெரும்பான்மை தனக்கு கிடைக்காத சூழலில் மிக கவனமாக தவெக செயல்பட்டிருக்க வேண்டும். உடனே தான் ஆதரவு கோர விரும்பும் அரசியல் கட்சித்தலைவர்களை விஜய் நேரில் சந்தித்திருக்க வேண்டாமா ? இரண்டாம் கட்டத்தலைவர்களின் பிடியில் தான் இல்லை என்பதையும் , கவர்னர் வழியாக பாஜக தமிழகத்திற்குள் நுழைய முயற்சிப்பதை தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் மனம்விட்டு கலந்துரையாடி இருக்க வேண்டாமா? வாட்ஸ் ஆப்பில் ஆதரவு கேட்டு கடிதத்தை அனுப்பி விட்டு பதில் சொல்லுங்கள் என்பதை எப்படி புரிந்து கொள்வது ?

வெற்றிபெற்ற பின் தேர்தலுக்கு முந்தைய முரண்பாடுகளை கூர்தீட்டாமல் , அனைத்து தலைவர்களின்நன்மதிப்பை பெரும் வகையில் பெருந்தன்மையாக கருத்துக்களை விஜய் கையாண்டிருக்க வேண்டும். ஆனால் வெற்றிச் செய்தி வந்த மறுக்கணமே மன்னராட்சிக்கு முடிவு கட்டப்பட்ட நாள் என ஆணவத்தையும், பழி வாங்கும் மனநிலையையும் வெளிப்படுத்தியது சரிதானா? மோதிலால் நேரு , ஜவகர்லால் நேரு, இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி, ராகுல்காந்தி என அய்ந்தாவது தலைமுறை வாரிசு அரசியலை சுமக்கும் காங்கிரசுடன் கைகோர்த்துக்கொண்டு வாரிசு அரசியலை பேசுவதை விட நகைமுரண் வேறேதும் இருக்கமுடியுமா ? திமுகவை ஒழித்துக்கட்டப்பட்ட மன்னராட்சி என பேசிவிட்டு திமுக தலைமையில் கூட்டணி அமைத்து வெற்றி கண்டுள்ள இடதுசாரிகளையும் விசிகவையும் கூசாமல் ஆதரவு கேட்டு அழைப்பதில் என்ன வகை தர்க்க நியாயம் உள்ளது. ?

விஜய் அவர்கள் குள்ள கரிஷ்மாஅடையாளத்தை , நாயக பிம்பத்தை பயன்படுத்திக்கொண்டு அவரை வெளியே வரவிடாமல் இளவரசாக்கி முடக்கி வைத்து விட்டு அவருடன் இருக்கும் இரண்டாம் கட்ட தலைவர்களில் ஒரு சிலர் திமுகவின் மீதுள்ள பகையை தீர்த்துக்கொள்ள விஜய்யை பயன்படுத்துகிறார்கள்.

ஆட்சிக்கு வந்த மறுநிமிடமே திமுக அதிமுக தலைவர்கள் கைது செய்யப்படுவார்கள் என பிதற்றுவது ஆணவத்தின் உச்சமல்லவா ? விசிக கட்சியில் தலைவர் திருமாவுடன் இருபது பேர் மட்டும் தான் இருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம் எங்கள் ஆட்கள்தான். சிலீப்பர்செல்லாகஅங்கே இருக்கிறாரகள் என பேசுவது என்னவகை அரசியல் அறம் ?

அரசியல் புரிதலாலும் தனது அன்பாலும் தனது சட்டமன்ற உறுப்பினர்களை தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ள வேண்டிய விஜய் தமிழ்நாட்டில் மீண்டும் சட்டமன்ற உறுப்பினர்களை அடைத்து வைக்கும் ரிசார்ட் அரசியலை கொண்டு வந்திருப்பது ரசிக்கத்தகுந்ததல்ல.

விஜய் அவர்கள் தன்னுடன்இருப்பவர்களின்தவறான அணுகுமுறையும் தவறான வழிகாட்டலும் தான் தனக்கு ஆதரவு வந்து சேர்வதற்கான வழியை அடைத்து வைத்திருக்கிறது என்பதை உடனேஉணரவேண்டும். சனநாயக நெறிமுறைகள் அனைத்தையும் மீறி கவர்னர் ஆட்சியை திணிக்க பாஜக முயன்று வரும் இந்த சூழலின் ஆபத்தை உணருவதும் அதை தடுத்து தமிழ்நாட்டை காப்பது தான் மக்கள் முன்னால் உள்ள சவால்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 - 70102 64701

## தேர்வில் தோல்வியுற்ற என்னருமை தம்பி, தங்கைகள் சிறிதும் மனம் தளர வேண்டாம்! சீமான்

சென்னை, மே. 9

நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் வெற்றி பெற்ற என் அன்பிற்கினிய தம்பி தங்கைகள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நல் வாழ்த்துகள்!

அதே சமயம், தேர்வில் தோல்வியுற்ற என்னருமை தம்பி, தங்கைகளும் சிறிதும் மனம் தளர வேண்டாம்!

தோல்விதான் வெற்றியின் தாய்!

தோல்வி என்பது தோல்வி அல்ல; அது தான் வெற்றிக்கான முதல் படி!

இன்று தோல்வி வந்தடைந்த உன்னிடம் நாளை வெற்றி வந்தடையாமல் இருக்கப் போவதில்லை!

தோல்விகளால் உன்னை ஒருபோதும் தோற்கடிக்க முடியாது; நீ முயற்சிக்க தோற்காத வரை!

உலகில் வெற்றியின் சிகரங்கள் தொட்ட சாதனையாளர்கள் யாவரும் தோல்வியின் தழும்புகள் தாங்கியவர்கள் தான்!

மதிப்பெண்கள் ஒட்டு மொத்த வாழ்க்கையையும் தீர்மானிக்கும் மந்திர எண்கள் அல்ல! அவை குறிப்பிட்ட பாடத்தில் குறிப்பிட்ட காலத்தில் நீங்கள் பயின்றதை அளவிடும் வெறும் அளவீட்டு எண்கள்தான்!

மதிப்பெண்கள் மட்டுமே மனித அறிவையும், ஆற்றலையும் தீர்மானிப்பதில்லை!

ஆகவே, என்னருமை தம்பிதங்கைகள் தோல்வியை கண்டு துவண்டுவிடாமல் மீண்டும் முயற்சி செய்யுங்கள்! உறுதியாக வெற்றி பெறுவீர்கள்!

வருங்காலம் உங்கள் அனைவருக்கும் நம்பிக்கை நிறைந்த வசந்த காலமாக அமைய அன்பும், வாழ்த்துகளும்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு வாழ்த்துகள் தமிழிசை சவுந்தரராஜன்

சென்னை, மே. 9

தமிழிசை சவுந்தரராஜன் தனது எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

பன்னிரண்டாம்வகுப்பு பொது தேர்தல் முடிவுகள் வெளியாகி இருக்கிறது.. வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்.. அதே நேரத்தில் கடுமையாக உழைத்தும் வெற்றியை தொட முடியாத குழந்தைகளுக்காக தான் இந்த பதிவு...

இனிமேல் தான் வாழ்க்கை ஆரம்பம் ஆகிறது தயவு செய்து எந்த வகையிலும் இந்த தோல்வி உங்களை பாதித்துவிடக்கூடாது.

தோல்வி அடைந்த பல பேர் தான் இன்று வாழ்க்கையில் பல சாதனைகளை புரிந்து இருக்கிறார்கள். அதனால் தேர்வு பெற்றவர்கள் மன மகிழ்ச்சியோடும் தேர்வு பெற முடியாதவர்கள் மனதிடத்தோடும் இந்த சூழ்நிலையை அணுக வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தருமபுரி செந்தில் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாநில மாவட்ட அளவில் சாதனை



தருமபுரி மே 09

தருமபுரி நகரில் உள்ள செந்தில் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகள் +2 பொதுத் தேர்வில் மாநில மற்றும் மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று சாதனை படைத்தனர். இந்தப் பள்ளியின் மாணவி ஹரிவாஷினி 597 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் இரண்டாம் இடமும், பள்ளி அளவில் முதலிடம் பெற்று சாதனை படைத்தார். அதே போன்று பள்ளியின் மாணவன் கௌதம் 594 மதிப்பெண்கள் பெற்று பள்ளி அளவில் இரண்டாம் இடமும், மாணவி நேனுகுமாரி, லட்சுமி பிரபா ஆகியோர் 593 மதிப்பெண்கள் பெற்று பள்ளி அளவில் மூன்றாம் இடமும் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர். 590 மதிப்பெண்களுக்கு மேல் 4 மாணவர்களும், 580 மதிப்பெண்களுக்கு மேல் 11 மாணவர்களும், 570 மதிப்பெண்களுக்கு மேல் 24 மாணவர்களும், 560 மதிப்பெண்களுக்கு மேல் 45 மாணவர்களும், 550 மதிப்பெண்களுக்கு மேல் 58 மாணவர்களும், 500 மதிப்பெண்களுக்கு மேல் 166 மாணவர்கள் மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். கணிதம் 1, உயிரியல் 1, கணினி அறிவியல் 5, கணக்கு பதிவியல் 3, பொருளியல் 4, வணிகவியல் 5, கணினி பயன்பாடு 1 நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். இந்த பள்ளியைச் சார்ந்த மாணவ ,மாணவிகள் தொடர்ந்து ஐந்தாவது வருடமாக +2 பொதுத் தேர்வில் மாவட்ட மற்றும் மாநில அளவில் சாதனைபடைத்துள்ளனர் என் ப து குறிப்பிடத்தக்கது. இந்த சாதனை படைத்த மாணவ, மாணவிகளை செந்தில் பள்ளி நிறுவனங்களில் தலைவர் செந்தில் கந்தசாமி, சால்வை அணிவித்து, பூங்கொத்து வழங்கி பாராட்டினார். செந்தில் குழுமத்துணைத் தலைவர் மணிமேகலை, செந்தில் குழுமங்களின் செயலாளர் தனசேகர், நிர்வாக அலுவலர் ரபிக் அஹமத், முதல்வர் வள்ளியம்மாள் , முதல்வர் (நிர்வாகம்) ஓங்காளி ,மேல்நிலை பிரிவு முதல்வர் திருநாவுக்கரசன் மற்றும் ஆசிரியர்கள் மாணவ, மாணவிகளை பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர்.



# உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு மாவட்ட கலெக்டர் தலைமையில் உறுதிமொழி

திருப்பத்தூர்:மே:9,

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், உலக செஞ்சிலுவை தினத்தை முன்னிட்டு, மாவட்ட ஆட்சியர்க.சிவசௌந்திரவல்லி தலைமையில் உலக செஞ்சிலுவை தின உறுதிமொழியினை அரசுதுறை அலுவலர்கள், செஞ்சிலுவை சங்க உறுப்பினர்கள், பள்ளி, கல்லூரிகளின் நிர்வாகிகள், மாணவ, மாணவியர்கள் ஆகியோர் ஏற்றுக்கொண்டனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ. நாராயணன்,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பாபு, மாவட்ட கருவுல அலுவலர் பாண்டியன், திருப்பத்தூர் மாவட்ட கிளை சேர்மன் கிஷோர் பிரசாத், செஞ்சிலுவை சங்க மேலாண்மை குழு உறுப்பினர் முருகன், செஞ்சிலுவை சங்க உறுப்பினர்கள், பள்ளி, கல்லூரிகளின் நிர்வாகிகள், மாணவ, மாணவியர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

## குளச்சல் அருகே

# பள்ளி சிறுவனை தாக்கிய வாலிபர் கைது

குளச்சல், மே.9

குளச்சல் அருகே கோணங்காடு பகுதியை சேர்ந்தவர் லுக்மானுல் ஹக்கீம் (48) மீன் வியாபாரம் செய்து வருகிறார். இவரது மகள் ஆதிலா (15) என்பவர் 9 ஆம் வகுப்பும், மகன் ஆசின் (10) 5ம் வகுப்பும் படித்து வருகின்றனர். இந்த இரண்டு பிள்ளைகளும் வீட்டருகே உள்ள ஆலிம் என்பவரது வீட்டிற்கு சென்று அரபி படித்து வருகின்றனர். நேற்று முன்தினம் மாலை இருவரும் அரபி படித்துவிட்டு வீட்டிற்கு திரும்பி சென்று கொண்டிருந்தனர். அப்போது அதே பகுதியை சேர்ந்த வாலிபர் விபின் (42) என்பவர் பைக்கில் அதிக ஒலி எழுப்பி பிள்ளைகள் மீது பைக்கை மோதுவது போல் சென்று அச்சமூட்டி உள்ளார். உடனே ஆசின் ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டுள்ளார். உடனடியாக விபின் திட்டி ஆசின் கன்னத்தில் அறைந்து, பிள்ளைகளை துரத்தி உள்ளார்.

இந்த தகவல் அறிந்த தந்தை லுக்மானுல் ஹக்கீம் உடனடியாக விபினிடம் சென்று விசாரித்துள்ளார். அவரையும் விபின் திட்டி மிரட்டி உள்ளார். தாக்குதலில் காயம் அடைந்த மாணவன் ஆசின் குளச்சல் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். இந்த சம்பவம் குறித்த புகாரின் பேரில் குளச்சல் போலீசார் வழக்கு பதிவு செய்து விபினை கைது செய்தனர்.

# பிளஸ்2 பொதுத்தேர்வில் வெற்றிக் கனியை சுவைத்த மாணவர்களுக்கு விஜய் வாழ்த்து

சென்னை, மே. 9

பிளஸ்2 தேர்வு முடிவுகள் இன்று வெளியாகி உள்ளன. பிளஸ்2 பொதுத்தேர்வில் 95.20 சதவீத மாணவர்கள் தேர்ச்சி அடைந்துள்ளதாக பள்ளிக் கல்வித் துறை தெரிவித்துள்ளது. இதன்படி மாணவர்கள் 93.19 சதவீதமும், மாணவிகள் 97 சதவீதமும் தேர்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் பிளஸ் 2 பொதுத்தேர்வில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், "பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில், விடாமுயற்சியால் வெற்றிக் கனியைச் சுவைத்த என் அன்புத் தம்பி, தங்கைகளுக்கு நெஞ்சார்ந்த வாழ்த்துகள். இந்த வெற்றி, உங்கள் கடின உழைப்பிற்குக் கிடைத்த அங்கீகாரம். உயர்கல்வி எனும் அடுத்த கட்டத்தை நோக்கி, நம்பிக்கையுடன் அடி எடுத்து வையுங்கள்.

அதே நேரத்தில், வெற்றி பெறத் தவறியவர்கள் மனம் தளர வேண்டாம். மீண்டும் முயற்சி செய்யுங்கள். வெற்றியின் அருகில் தான் இருக்கிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் அனைவரின் எதிர்காலமும் பிரகாசிக்கட்டும். நல்லதே நடக்கும்! வெற்றி நிச்சயம்!" என்று தெரிவித்துள்ளார்.

## மணப்பாறை அருகே

# சாலையில் தீப்பற்றி எரிந்த ஈச்சர் வாகனம்



திண்டுக்கல், மே. 9

திண்டுக்கல்லில் இருந்து லோடு ஏற்றிச் சென்ற அருப்புக்கோட்டையைச் சேர்ந்த யுவராஜ் (27) என்ற Eicher வாகன ஓட்டுநர், திருச்சிதிண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் இன்று (07.07.26) அதிகாலை சுமார் 2:00 மணியளவில் வையம்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட கீரனூர் அருகே வந்து கொண்டிருந்தபோது, வாகனத்தின் இன்ஜினில் புகை வந்துள்ளது. வாகனத்தை சாலையோரம் நிறுத்தி பார்த்தபோது, திடீரென வாகனம் தீப்பிடித்து எரிந்தது. தகவல் அறிந்த வையம்பட்டி தீயணைப்பு குழுவினர் உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்து தீயை அணைத்தனர்.

## திருச்சியில்

# போக்சோ குற்றவாளிக்கு ஆயுள் தண்டனை

திருச்சி, மே. 9

திருச்சி மாவட்டம் வாமடம் பகுதியில் பாட்டி வீட்டில் வளர்ந்து வந்த ஒன்பது வயது சிறுமியை கொள்ளிடம் ஆற்றுப்பகுதிக்கு அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்த குற்றத்திற்காக அதே பகுதியைச் சேர்ந்த சின்ன ராஜா என்பவரை போலீசார் கைதுசெய்தனர். இது தொடர்பான வழக்கு மே 6 மகிளா கோர்ட்டில் நீதிபதி சண்முகப்பிரியா முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. இதில், குற்றவாளி சின்ன ராஜாவுக்கு ஆயுள் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

## பிளஸ் 2 தேர்வு முடிவுகள்

# குமரி மாவட்டம் மாநில அளவில் 3 ம் இடம்: 97 .63 சதவீத தேர்ச்சி



நாகர்கோவில், மே. 9

தமிழகத்தில் பிளஸ் 2 தேர்வு முடிவுகள் நேற்று வெளியானது. குமரி மாவட்டத்தில் 261 பள்ளிகளை சேர்ந்த 10 ஆயிரத்து 179 மாணவர்கள், 11 ஆயிரத்து 360 மாணவிகள் என மொத்தம் 21 ஆயிரத்து 539 மாணவ மாணவிகள் பிளஸ் 2 தேர்வு எழுதி இருந்தனர். இதில் 9 ஆயிரத்து 780 மாணவர்களும், 11 ஆயிரத்து 248 மாணவிகளும் என மொத்தம் 21 ஆயிரத்தி 28 மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி விகிதம் 97.63 சதவீதம் ஆகும். மாணவர்கள் 96.08 சதவீதமும், மாணவிகள் 99.01 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

குமரி மாவட்டத்தில் 60 அரசு பள்ளிகளை சேர்ந்த 2 ஆயிரத்து 950 மாணவர்களும், 3 ஆயிரத்து 262 மாணவிகள் என மொத்தம் 6 ஆயிரத்து 212 மாணவ மாணவிகள் பிளஸ் 2 தேர்வு எழுதினர். இதில் அவர்களில் 2 ஆயிரத்து 758 மாணவர்களும், 3 ஆயிரத்து 218 மாணவிகளும் என மொத்தம் 5 ஆயிரத்து 971 மாணவ மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

மாணவர்களின் தேர்ச்சி சதவீதம் 93.49 சதவீதமாகும். மாணவிகளின் தேர்ச்சி விகிதம் 98 .50 சதவீதமாகும். மொத்த தேர்ச்சி விகிதம் 96.12 சதவீதம் ஆகும் . 16 அரசு பள்ளிகளில் 100% தேர்ச்சி அடைந்துள்ளனர். பிளஸ் டூ தேர்வில் தமிழக அளவில் குமரி மாவட்டம் மூன்றாவது இடத்தை பிடித்துசாதனைபடைத்திருக்கிறது.அதுமட்டுமின்றி குமரி மாவட்டத்தில் 120 பள்ளிகள் 100 சதவீதம் தேர்ச்சி பெற்றுள்ளன.

பிளஸ் டூ தேர்வு வெளியானதை தொடர்ந்து மாணவ மாணவிகளின் செல்போனில் ஆன்லைன் மூலமாகதேர்வுமுடிவைபார்த்தனர்.சிலமாணவர்கள் கம்ப்யூட்டர் மையங்களில் சென்று தேர்வு முடிவு தெரிந்து கொண்டனர். தமிழக அளவில் குமரி மாவட்டம் மூன்றாவது இடத்தை பிடித்ததை தொடர்ந்து மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி பாலதண்டாயுத பாணியை கலெக்டர் அழகு மீனா பாராட்டினார்.



தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம் பாஞ்சாலங்குறிச்சியில் அமைந்துள்ள வீரபாண்டிய கட்டபொம்மன் கோட்டையில் சுதந்திரப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் திருவிழாவினை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாரது திருஉருவச் சிலைக்கு மாவட்ட ஆட்சியர் விஷு மகாஜன், மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.சி.மதன் ஆகியோர் இன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், வேளாண்மைத்துறை சார்பாக, 32 வது அகில இந்திய மாங்கனி கண்காட்சி நடைபெறுவது குறித்து, அனைத்து துறை அலுவலர்களுக்கான முதற்கட்ட கலந்தாய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன், திட்ட இயக்குநர்.மகளிர் திட்டம். பெரியசாமி, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர்.பொது. கிருஷ்ணன், வருவாய் கோட்டாட்சியர் ஷாஜகான், இணை இயக்குநர்.வேளாண்மை. காளிமுத்து மற்றும் அனைத்துறை அலுவலர்கள் உள்ளனர்.



## தருமபுரியில்

# மாம்பழ குடோன் மற்றும் விற்பனை நிலையங்களில் உணவு பாதுகாப்புத் துறையினர் திடீர் ஆய்வு

தருமபுரி மே 09

தருமபுரியில் மாம்பழ குடோன் மற்றும் விற்பனை நிலையங்களில் உணவு பாதுகாப்புத் துறையினர் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். தமிழகம் முழுவதும் வரும் காலங்களில் மாம்பழங்கள் விற்பனை வரத்து அதிகரிக்கும் என்பதால் இயற்கையான முறையில் பழுக்க வைத்து விற்பனை செய்யப்படுகின்றனவா, உடல் நலத்துக்கு பாதிப்பு உண்டாக்கும் வகையில் செயற்கையான முறையில் ரசாயன திரவம் (எதிபான் மற்றும் எதியோபான்) எத்திலின் ரீபைனர் பவுடர் நேரடியாக பழங்களில் வைத்தல் முறை மற்றும் கார்பைட் கற்கள் வைத்து பழுக்க வைக்கப்படுகின்றவா என கண்காணித்து, அவ்வாறான செயல்கள் காணும் பட்சத்தில் அவ்வணிகர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து அறிக்கை சமர்ப்பிக்க மாநில உணவு பாதுகாப்புத்துறை ஆணையர் உத்தரவிட்டதன் அடிப்படையிலும், தருமபுரி மாவட்ட நிர்வாகத்துக்கு வந்த புகார் அடிப்படையிலும் கடந்த சில தினங்களாக தருமபுரி மாவட்டத்தில் மாம்பழம் மற்றும் குளிர்பானங்கள் குறித்து உணவு பாதுகாப்பு துறை மாவட்ட நியமன அலுவலர் தலைமை மற்றும் மேற்பார்வையில் ஒன்றியம் வாரியாக உணவு பாதுகாப்பு அலுவலர்கள் ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக தருமபுரி உணவு பாதுகாப்புத் துறை மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் கைலாஷ்குமார் தலைமையில் தருமபுரி நகராட்சி மற்றும் ஒன்றிய உணவு பாதுகாப்பு அலுவலர் நந்தகோபால் உள்ளிட்ட குழுவினர் தருமபுரி நகராட்சிக்கு உட்பட்ட உழவர் சந்தை மற்றும் சந்தைப் பேட்டை, திருப்பத்தூர் ரோடு, பென்னாகரம் ரோடு , பழையபேருந்து நிலையம் ,பாரதிபுரம் உள்ளிட்ட பகுதியில் உள்ள மாம்பழம் மொத்த விற்பனை குடோன்கள் மற்றும் விற்பனை நிலையங்களில் திடீர் ஆய்வு செய்தனர். இந்த ஆய்வில் உழவர் சந்தையில் ஒரு கடையில் தரமற்ற சந்தேகத்திற்கு இடமான பழங்கள் சுமார் 20 கிலோ அளவிற்கு பறிமுதல் செய்து அப்புறப்படுத்தப்பட்டு வாங்கும் இடம் நபர்கள் குறித்து தெரிந்து வாங்கி விற்பனை செய்வதை கண்காணித்திட உழவர் சந்தை நிர்வாக அலுவலரிடமும் , விற்பனை விவசாயி இடமும் தெரிவிக்கப்பட்டது .

மேலும் சந்தப்பேட்டை பகுதியில் ஆய்வு செய்ததில் இரண்டு மொத்த வியாபாரிகளிடம் ரசாயன திரவங்கள் தெளித்து பழுக்க வைக்கப்பட்டிருந்த மாம்பழங்கள் சுமார் 100 கிலோ அளவிலானது பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் ரசாயன திரவம் மற்றும் கலவை கலந்த பாட்டில் ஸ்பிரேயர்கள் பறிமுதல் செய்யப்பட்டது. சேர்க்கை முறையில் பழுத்த பழங்கள் பறிமுதல் செய்யப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு ரூபாய் 1,000 மற்றும் 2,000 உடனடி அபராத விதிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டது . பேருந்து நிலைய பகுதியில் உள்ள பழக்கடைகள் ஆய்வு செய்ததில் ஒரு கடை குடோனில் ரசாயனம் பவுடர்கள் காணப்பட்டது. ஆனால் மாம்பழங்கள் ஏதும் காணப்படவில்லை இன்று அல்லது நாளை காவேரிப்பட்டினம் பகுதியில் இருந்து கொள்முதல் செய்து பழங்கள் வரலாம் என விற்பனையாளர் தெரிவித்தார். பவுடர் பாக்கெட்டுகளை பறிமுதல் செய்து உரிமையாளரை எச்சரித்து உடனடி அபராதம் ரூபாய் 2,000 விதிக்கப்பட்டது. நுகர்வோர்கள் மாம்பழங்கள் இயற்கை முறையில் பழுக்க வைக்கப்பட்டுள்ள பழங்களா என அறிய ஒரு பாத்திரத்தில் நீர் நிரப்பி அந்த நீரில் பழுத்த பழங்களை போடும்போது பழங்கள் மேலே மிதந்தால் அது சேர்க்கை முறையில் பழுத்தவை, இயற்கையானவை பாத்திரத்தில் அடியில் போய்தங்கும் என மாவட்ட நியமன அலுவலர் தெரிவித்தார். இதே போல் பழங்களின் பின்பகுதி (காம்பு) பகுதியில் நுகரும்போது இயற்கையான பழுத்த பழங்கள் பழவாசனை வீசும், செயற்கை எனில் அந்த இடம் சாம்பல் பூசினார் போல் இருக்கும். மருந்து வாசனை அடிக்கும் மேலும் பழங்கள் ஒரே சீராக மஞ்சளாக இருந்தால் அது சேர்க்கை முறையில் பழுத்த பழங்கள் என அறிந்து கொள்ளலாம். மேலும் பழங்கள் அறிந்தால் சதைப்பகுதி வெள்ளையாக காணப்பட்டாலும் அது சேர்க்கை முறையில் பழுத்தவை என அறியலாம் விழிப்புணர்வு செய்தி தெரியப்படுத்தினர்.

மாவட்ட முழுவதும் தொடர்ச்சியாக ஆய்வுகள் தொடரும் ஆய்வில் விதிமுறைகள் கண்டுபிடிக்கப்பட்டால் உணவு பாதுகாப்பு சட்ட விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நியமன அலுவலர் தெரிவித்தார். மேலும் பொதுமக்கள் சேர்க்கை முறையில் பழங்கள் விற்பனை செய்வது கண்டால் 9444042322 என்ற எண்ணிற்கு தகவல், புகார் தெரிவிக்கலாம் என விழிப்புணர்வு செய்தனர்.

## கிருஷ்ணகிரி

# பாரத் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, பனிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் சாதனை



கிருஷ்ணகிரி மே 9

கிருஷ்ணகிரி பாரத் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் பனிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சத வீதம் தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இப்பள்ளியில் பயின்ற மாணவி மோனிஷா பிரித்தி, சோபியா, கௌசல்யா ஆகிய மூன்று மாணவிகளும் 589/600 மதிப்பெண் பெற்று முதலிடமும், சுப்ரியா 587/600 மதிப்பெண் பெற்று இரண்டாம் இடமும், முன்னிலா தேவா 585/600 மதிப்பெண்கள் பெற்று மூன்றாம் இடமும் பெற்று பள்ளிக்கு பெருமைசேர்த்துள்ளனர்.

மேலும் 550 மதிப்பெண்களுக்கு மேல் 15 மாணவ, மாணவிகளும், 500 மதிப்பெண்களுக்கு மேல் 25 மாணவ, மாணவிகளும், 450 மதிப்பெண்களுக்கு மேல் 62 மாணவர்களும் பெற்றுள்ளனர். கணிணிபயன்பாடுபாடத்தில் 1 மாணவன் 100/100 மதிப்பெண்களும் பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர். மேலும் பாடவாரியாக தமிழில் 27 மாணவர்களும், ஆங்கிலத்தில் 15 மாணவர்களும், இயற்பியலில் 16 மாணவர்களும், வேதியியலில் 20 மாணாக்கர்களும், உயிரியல் பாடத்தில் 10 மாணவர்களும், வணிகவியல் பாடத்தில் 5 மாணவர்களும், பொருளியல் பாடத்தில் 4 மாணவர்களும், கணக்கு பதிவியல் பாடத்தில் 5 மாணவர்களும் 95 மதிப்பெண்களுக்கு மேல் பெற்றுள்ளனர்.

பள்ளியில் சிறப்பிடம் பெற்ற மாணவிகளை பாரத் கல்வி குழுமங்களின் நிறுவனர் மணி, கேடயம் வழங்கி பாராட்டினார். மேலும் தாளாளர் கிருஷ்ணவேணி மணி, பள்ளியின் செயலாளர் டாக்டர். சந்தோஷ் பாராட்டி வாழ்த்தினர். பள்ளியின் முதல்வர் நசீர் பாஷா, துணை முதல்வர் பெரியண்ணன் மற்றும் ஆசிரிய, ஆசிரியைகள் மாணவ, மாணவிகளை பாராட்டினர்.

## தஞ்சாவூர் மாவட்டத்தில்

# அரசு ஆதிதிராவிடர் நலப் பள்ளியில் மாணவர்களை சேர்க்க அழைப்பு



தஞ்சாவூர் மே 9

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள அரசு ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் மாணவ மாணவிகளை சேர்க்க முன்வருமாறு பெற்றோர்களுக்கு மாவட்ட கலெக்டர் பிரியங்காபங்கஜம் அழைப்பு விடுத்துள்ளார்

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்திருப்பது :

மாவட்டத்தில் ஆதிதிராவிடர்நலத்துறைமூலம் 3 மேல்நிலைப் பள்ளிகளும், 7 உயர்நிலைப் பள்ளிகளும்,6 நடுநிலை பள்ளி களும் ,84 தொடக்கப் பள்ளிகளும் என மொத்தம்100 பள்ளிகள் இயங் கி வருகின்றன. இப்பள்ளியில்1 முதல் 12 வகுப்பு வரை தமிழ்வழியி ல் கல்விஅ பயிலும் மாணவர்களுக்கு அரசு பணியில் முன்னுரிமை மற்றும் ஆறு முதல் 12 வரை அரசு பள்ளியில் பயிலும் மாணவர்களு க்கு உயர்கல்விபயில 7.5 சதவீதம் முன்னுரிமையில் இட ஒதுக்கீடு வழங்கப் பட்டு வருகிறது

மேலும், மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் பல்வேறு சலுகைகளும், விடுதி வசதிகளும் வழங்கப்பட்டு வருவதால் 20262027 ஆம் கல்வி ஆண்டில் 5 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளை பெற் றோர்கள் அருகில் உள்ள அரசு ஆதி திராவிடர் நலப் பள்ளியில் சேர்க்கு மாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது

## தஞ்சாவூர் மாவட்டத்தில்

# அனுமதியின்றி செம்மண் கிராவல் அள்ளிய 5 பொக்லின், 2 லாரிகள் பறிமுதல்

### கோட்டாட்சியர் நடவடிக்கை



தஞ்சாவூர் மே 9

தஞ்சாவூர் மாவட்டத்தில் அனுமதி யின்றி செம்மண் கிராவல் அள்ளிய 5 பொக்குலின் இயந்திரம், 2 லாரி களை தஞ்சாவூர் கோட்டாட்சியர் பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்துள்ளார்

தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் அருகே உள்ள மருதகுடி கிராமத் தில் செம்மண் கிராவல் அள்ளுவ தற்கு வழங்கப் பட்ட உரிமம் 4 நாட்களுக்கு முன்பு முடிவடைந்தது, என்றாலும் தொடர்புடைய நிலத்தில் தொடர்ந்து அனுமதி இன்றி செம்மண் அள்ளப்படுவதாக வருவாய்த்துறையினருக்கு புகார்கள் வந்த வண்ணம் இருந்தது

இதையடுத்து தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் நித்யா, தஞ்சாவூர் தாசில்தார் சிவக்குமார் மற்றும் வருவாய் துறை அதிகாரி கள் சம்பவ இடத்திற்கு சென்று ஆய்வு மேற் கொண்டனர்.அப்போது அந்த பகுதியில் அனுமதியின்றி எ செம்மண் கிராவல் அள்ளி வந்தது தெரிய வந்தது

மேலும் செம்மண் அள்ளுவதற் காகவும், அவற்றைக் கொண்டு செல்வதற்காகவும் லாரிகள் நிறுத்தி வைக்கப் பட்டு இருந்தன, இதையடுத்து நிறுத்தப்பட்டிருந்த 5 பொக்லின் எந்திரங்கள், 2 லாரிகளை அதிகாரிகள்பறிமுதல்செய்து போலீசாரிடம் ஒப்படைத்தனர். மேலும் இது தொடர்பாக வருவாய்த்துறையினர், போலீசாரும் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.




## தஞ்சாவூரில்

# கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தை கட்சியினர் விலைவாசி உயர்வை கண்டித்து ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூர் மே 9

தஞ்சாவூரில் விலைவாசி உயர்வை கண்டித்து கம்யூனிஸ்ட் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சியி னர் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

தஞ்சாவூரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்,இந்தியகம்யூனிஸ்ட் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் ரயிலடி தலைமை தபால் நிலையம் அருகே நடைபெற்றது

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலாளர் சின்னை பாண்டியன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர்சக்திவேல், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநகர் மாவட்ட செயலாளர் இடிமுரசு இலக்குமணன் ஆகியோர் தலைமை தாங்கினார்

ஆர்ப்பாட்டத்தில் ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களை கடுமை யாக பாதிக்கும் வகையில் வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு விலையை உயர்த்திய மத்திய அரசை கண்டிப்பதும் விலைவாசி உயர்வை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்

ரயில்வே துறையில் பணியிடங் களில் குறைத்து இளைஞர்களின்வேலை வாய்ப்பைப் பறிக்கும் நடவடிக்கைகளை மத்திய அரசு கைவிட வேண்டும் என்பன உள்ளி ட்ட கோரிக்கையை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டது

இந்த ஆர்ப்பாட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் நிர்வாகி சீனிவாசன், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மனோகரன், ஜெயபால், செந்தில் குமார், கண்ணன் ,அருளரசன் கலைச்செல்வி, மாநகர செயலாளர் வடிவேலன், விடுதலை சிறுத்தை கள் கட்சியின் தேர்தல் பணி குழு மாநில செயலாளர் விவேகானந்தம் இந்திய கம்யூனிஸ்ட் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் சந்திரகுமார், தில்லை வனம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

# தவெக பெரும்பான்மையை நிரூபிக்க அவகாசம் அளிக்க வேண்டும்

### வேல்முருகன் வலியுறுத்தல்



சென்னை, மே. 9

தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில் தவெக தலைவரை பதவி ஏற்கஅனுமதித்து, பெரும்பான்மையை நிருபிக்க அவகாசம் அளிக்க வேண்டும்.

தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் தமிழக வெற்றிக்கழகம் 108 இடங்களை வென்றுள்ளது. ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவை என்ற சூழலில்தமிழகபொறுப்பு கவர்னர் ராஜேந்திர விஷ்வநாத் அர்லேகரை 2 முறை தவெக தலைவர் விஜய் சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரி. மீதமுள்ள ஆதரவைப் பெற பாஜக கூட்டணியில் இல்லாத விசிக, கம்யூனிஸ்ட் ஆதரவை கோரியுள்ளார். இதற்கிடையே காங்கிரஸ் ஆதரவை தெரிவித்துள்ளது.

தனிப்பெரும்பான்மை பெற்ற கட்சியை ஆட்சி அமைக்க அழைக்காமல் எழுத்துப்பூர்வ ஆதாரம் *(documentary proof)* மற்றும் 118 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவுப் பட்டியல் *(letter of support)* வழங்குமாறு கவர்னர் தவெக தலைவர் விஜயிடம் கோரியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

1989ம் ஆண்டு கர்நாடகாவில் ஜனதா தளம் கட்சியை சேர்ந்த எஸ்.ஆர். பொம்மையின் ஆட்சியில் சில சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவை விளக்கி கொண்டதாக கவர்னருக்கு கடிதம் எழுதினர். இதையடுத்து எஸ் ஆர் பொம்மை பெரும்பான்மையை இழந்து விட்டதாககவர்னர்பெண்டே கண்டி வெங்கடசுப்பையா குடியரசு தலைவருக்கு பரிந்துரை செய்தார். இதனை தொடர்ந்து சாசனப் பிரிவு 356ன் கீழ் குடியரசுத் தலைவர் ஆர் வெங்கட்ராமன் உத்தரவின் பேரில் சட்டமன்றம் கலைக்கப் பட்டது.

இதனை எதிர்த்து எஸ் ஆர் பொம்மை உச்சநீதிமன்றத்தை அணுகினார்.

இதனை தொடர்ந்து 1994 ம் ஆண்டு இந்திய அரசியல் சாசன வரலாற்றில் 9 நீதிபதிகள் கொண்ட அமர்வு *(Constitutional Bench)* இவ்வழக்கை விசாரித்து முதல் அமைச்சருக்கு பெரும்பான்மை உள்ளதா என்பதை சட்டமன்றத்தில் நிரூபிக்க முடியும். அரசியல் சாசன சட்டம் 356 ஐ தவறாக பயன்படுத்தினால் ரத்து செய்ய நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்ற வரலாற்று சிறப்பு மிக்க உச்ச நீதி மன்ற தீர்ப்பை கவர்னர் உணரவேண்டும்.

இந்தியாவில் மகாராஷ்டிரா, கர்நாடகா, ஜார் கண்ட் உள்ளிட்ட மாநிலங்களில் இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளது. அப்போதெல்லாம் உச்ச நீதிமன்றம் தலையிட்டு அனைவரும் ஏற்கும் தீர்ப்பை வழங்கியுள்ளது.

பாஜக ஆதரவில்லாத கட்சித்தலைவர்கள் அனைவரும் கவர்னரின் இச்செயலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

எனவே பாஜகவின் நிழலாக கவர்னர் செயல்பட்டு ஜனநாயக படுகொலை செய்யாமல், தமிழக வாக்காளர்களின் தீர்ப்பை ஏற்று தவெக தலைவரை பதவி ஏற்க அனுமதித்து, பெரும்பான்மையை நிருபிக்க அவகாசம் அளிக்க வேண்டும் என வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பதவி சுகம் எங்கே கிடைக்கும் என காங்கிரஸ் செயல்படுகிறது

### வானதி சீனிவாசன் பேச்சு



சென்னை, மே. 9

தனிபெரும் கட்சியாக விஜய் உருவெடுத்திருந்தாலும், அவரை ஆட்சி அமைக்க ஆளுநர் இன்னும் அழைக்கவில்லை. ஆளுநர் உள்நோக்கத்தோடு செயல்படுவதாக காங்கிரஸ் விமர்சித்திருக்கும் நிலையில் பாஜக தேசிய மகளிர் அணித் தலைவர் வானதி சீனிவாசன் கோவையில், செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டியது சட்டமன்றம்தான். அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், ஆதரவு கடிதங்கள், தேவைப்படக்கூடிய ஆதாரங்களை கவர்னர் கேட்கிறார்.

அதைக்கூட கேட்கக்கூடாது என்று எப்படி சொல்ல முடியும் ? கவர்னருக்கு விருப்பு, வெறுப்பு கிடையாது. அதிகாரம், பதவி சுகத்திற்காக காங்கிரஸ் கட்சி தவெகவுடன் கூட்டணி வைத்துள்ளது என்றார்.

## கன்னியாகுமரியில்

# வீடு புகுந்து ரூ.12லட்சம், 13 பவுன் நகைகள் திருடிய கொள்ளையன் கைது



நாகர்கோவில், மே 9

கன்னியாகுமரி, சுவாமிநாதபுரம் பகுதியை சேர்ந்தவர் பொன்னையா. இவர் சிங்கப்பூரில் பணியாற்றி வருகிறார். இவரது மனைவி முத்துலட்சுமி. இவர்களது மூத்த மகன் ரபின் என்பவர் துபாயில் பணிபுரிந்து வருகிறார். 2வது மகன் லெமீஸ் என்பவர் ஹைதராபாத்தில் படித்து வருகிறார். கடந்த 1ம் தேதி முத்துலட்சுமி வீட்டை பூட்டிவிட்டு வடக்கன்குளத்தில் உள்ள கோவில் திருவிழாவுக்கு சென்றுள்ளார். மறுநாள் 2ம் தேதி திரும்பி வந்த போது வீடு உடைக்கப்பட்டு, வீட்டில் இருந்த ரூ 12 லட்சம், 13 பவுன் தங்க நகைகளை மர்ம நபர்கள் கொள்ளையடித்து சென்றிருந்தனர்.

இது குறித்து கன்னியாகுமரி போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. மாவட்ட எஸ்பி ஸ்டாலின் உத்தரவின் பேரில் டிஎஸ்பி ஜெயச்சந்திரன், இன்ஸ்பெக்டர் சுந்தர் ராஜ பெருமாள் தலைமையில் தனிப் படை அமைக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்த விசாரணை நடத்தினர். அந்த பகுதி சிசிடிவி கேமராக்களை ஆய்வு செய்ததில் கார் ஒன்று சிக்கியது. கார் எண் பதிவு அடிப்படையில் நெல்லை மாவட்டம் திம்மராஜபுரத்தை சேர்ந்த பொன்ராஜ் (27) என்பவர் கொள்ளை அடித்தது தெரிய வந்தது.

தனி படை போலீசார் திருநெல்வேலி சென்று தேடுதல் வேட்டை நடத்தி பொன்ராஜை கைது செய்தனர். அவரிடம் இருந்து ரூ. 10 லட்சம் ரொக்கம், 10 பவுன் நகை, சொகுசு கார் ஆகியவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர். கைது செய்யப்பட்ட பொன்ராஜ் வாடகை கார் டிரைவர் ஆவார். மேலும் பழைய வாகனங்களை வாங்கி விற்கும் தொழிலையும் செய்து வந்துள்ளார். இவர் மீது 25 வழக்குகள் உள்ளன.

தனிப்படை போலீசார் கூறுகையில், சுமார் 200க்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்து பொன்ராஜை கண்டுபிடித்ததாகவும், இதில் ஒரு இடத்தில் காரை ஓட்டி சென்ற போது கேமரா பதிவில் பொன்ராஜின் உருவம் தெளிவாக பதிவாகி இருந்ததாகவும், அதன் பேரில் விசாரணை நடத்தி கைது செய்ததாகவும் கூறினார்கள். குற்றவாளியை கைது செய்த தனிப்படை போலீசாரை எஸ்பி ஸ்டாலின் பாராட்டினார்.

## கோவை

# மின்கம்பியை துதிக்கையால் பிடித்து இழுத்த யானை மின்சாரம் தாக்கி உயிரிழப்பு



கோவை, மே. 9

கோவை அருகே உள்ள மதுக்கரை வனப்பகுதியில் மின் மாற்றியில் இருந்த மின்கம்பியை துதிக்கையால் பிடித்து இழுத்த யானை மின்சாரம் தாக்கி உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

வனத்துறையினர் நடத்திய விசாரணையில், உயிரிழந்தது சுமார் 25 வயது மதிக்கத்தக்க ஆண் யானை என்பது தெரியவந்துள்ளது. வனப்பகுதியை ஒட்டியுள்ள தோட்ட பகுதிகளில் உணவு மற்றும் தண்ணீர் தேடி யானைகள் அடிக்கடி வருவதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், யானை மின் மாற்றி அருகே சென்ற போது அங்கிருந்த கம்பியை துதிக்கையால் பிடித்து இழுத்ததாகவும், அதில் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தகவல் அறிந்த வனத்துறையினர் மற்றும் கால்நடை மருத்துவ குழுவினர் சம்பவ இடத்துக்கு சென்று யானையின் உடலை பரிசோதனை செய்தனர். மேலும், வனப்பகுதியை ஒட்டிய தோட்டங்களுக்கான மின்சார கட்டமைப்புகளை யானைகள் அணுகாத வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று மின்வாரிய அதிகாரிகளிடம் வனத்துறை வலியுறுத்தியுள்ளது.

## கோவை

# பள்ளி மாணவன் மீது கொலை வெறி தாக்குதல்; போலீசில் புகார்

மார்த்தாண்டம், மே.9

பளுகல் அருகே கட்டியோடு என்ற பகுதியை சேர்ந்தவர் ஜெபா ஷைன் (49). இவருக்கு 2 மகன்கள் உள்ளனர். மூத்த மகன் ஜிஜின் ஜாய் (19) சென்னையில் உள்ள கல்லூரி ஒன்றில் படித்து வருகிறார். 17 வயதுடைய 2 வது மகன் 12 ஆம் வகுப்பு தேர்வு எழுதிவிட்டு தேர்வு முடிவுக்காக காத்திருந்தார். இந்த நிலையில் அந்த பகுதியில் உள்ள அரசு கணினி பயிற்சி நிலையத்துக்கு மாணவர் சென்று வந்தார். அப்போது காணத்துக்கோணம் பகுதியில் 5 பேர் கொண்ட கும்பல் அமர்ந்திருந்து தினமும் பள்ளி மாணவர்களை ஆபாசமாக பேசி வந்துள்ளனர்.

சம்பவ தினம் அதே போல் மாணவரை ஆபாசமாக தகாத வார்த்தையில் திட்டி உள்ளனர். இதை மாணவர் தட்டி கேட்டுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த வாலிபர் சஞ்சய் என்பவர் வந்து சிறுவன் முகத்தில் தாக்கியுள்ளார். இதில் மாணவரின் கண்ணில் பலத்த காயம் ஏற்பட்டது. பெற்றோர் உடனே அருகில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிறுவனை சேர்த்தனர். இது குறித்து சிறுவனின் தந்தை ஜெபா ஷைன் பளுகல் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

### ஈரோடு மாவட்டம்

# பிளஸ் 2 தேர்வில் மாநில அளவில் முதல் இடம் பெற்று சாதனை

ஈரோடு மே 9

பிளஸ் 2 பொதுத்தேர்வு கடந்த மார்ச் மாதம் 2 ந் தேதி துவங்கி 26 ந் தேதி வரை நடைபெற்றது. இந்த தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டது. ஈரோடு மாவட்டத்தில் 221 பள்ளிகளில் பயின்று தேர்வெழுதிய 22,478 மாணவ மாணவியர்களில் 22,225 மாணவ மாணவியர்கள் தேர்ச்சி பெற்று ஒட்டுமொத்தமாக 98.87 சதவிகிதம் தேர்ச்சியில் மாநில அளவில் முதலிடம் பெற்றுள்ளது. 128 பள்ளிகளில் தேர்வெழுதிய அனைத்து மாணவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் 46 அரசுப் பள்ளிகள் 1 அரசு பழங்குடியினர்உண்டு உறைவிடப் பள்ளி நிதியுதவிப் பள்ளிகள் 5 தனியார் பள்ளிகள் 76 ஈரோடு மாவட்டத்தில் அரசு பொதுத்தேர்வெழுதிய மாணவ மாணவியர்களில் 1235 பேர் பாடவாரியாக 100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

### சென்னையில்

# 13ம் தேதி ம.தி.மு.க. நிர்வாகக் குழு கூட்டம்: வைகோ அறிவிப்பு



சென்னை, மே. 9

நிர்வாகக் குழு கூட்டம் தேதி மாற்றம் குறித்து ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் நிர்வாகக் குழு கூட்டம், 16.5.2026க்கு பதிலாக 13.5.2026 புதன் கிழமை காலை 10 மணிக்கு கழக அவைத் தலைவர் ஆடிட்டர் ஆ.அர் ஜுனராஜ் தலைமையில் சென்னை, எழும்பூரில் உள்ள தலைமைக் கழகம் தாயகத்தில் நடைபெறும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### மசினகுடியில்

# முழு வேலைநிறுத்தம்: கடைகள் அடைப்பு



ஊட்டி, மே. 9

கர்நாடகா மாநிலம் மைசூருவில் இருந்து முதுமலை புலிகள்காப்பகம்வழியாகமசினகுடிக்கும்,கூடலூருக்கும் சாலை செல்கிறது. இதில் மசினகுடியில் இருந்து கல்லட்டி மலைப்பாதை வழியாக ஊட்டிக்கு கொண்டை ஊசி வளைவு கொண்ட சாலை செல்கிறது.

கடந்த காலங்களில் ஊட்டியில் இருந்து கல்லட்டி வழியாக மசினகுடிக்கு சுற்றுலா பயணிகளின் வாகனங்கள் இயக்கும்போது விபத்துகள் ஏற்பட்டு வந்தது. இதனால் பலர் உயிரிழந்தனர். இதைத்தொடர்ந்து ஊட்டியில் இருந்து கல்லட்டி மலைப்பாதை வழியாக மசினகுடிக்கு வாகனங்களை இயக்க தடை விதிக்கப்பட்டது. ஆனால் மசினகுடியில் இருந்து ஊட்டிக்கு சுற்றுலா பயணிகளின் வாகனங்கள் இயக்கப்பட்டு வந்தது.

வாகன விபத்துகள் அதிகரித்து வருவதாக நீதிமன்றம் உத்தரவின் அடுத்து, கடந்த 1ந் தேதி முதல் சுற்றுலா வாகனங்கள் செல்ல மாவட்ட நிர்வாகம் தடை விதித்தது. இதனால் மசினகுடியில் இருந்து ஊட்டிக்கு சுற்றுலா வாகனங்கள் இயக் கப்படாததால் பயணிகள் கூடலூர் வழியாக பயணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், மசினகுடி ஊராட்சி மக்கள் கல்லட்டி மலைப் பாதை வழியாக சென்று வர கட்டுப்பாடு விதிக்கவில்லை.

இந்தநிலையில் மசினகுடியில் இருந்து ஊட்டிக்கு செல்லும் மலைப்பாதையில் சுற்றுலா பயணிகளின் வாகனங்களை அனுமதிக்கக் கோரி மசினகுடி ஊராட்சியில் இன்று முழு வேலைநிறுத்த போராட்டம் நடைபெற்று வருகிறது. இதனால் ஏராளமான சவாரி வாகங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. நகரின் பெரும்பாலான கடைகள் அடைக்கப்பட்டுள்ளதால் சாலைகள் வெறிச்சோடி காணப்படுகிறது. மேலும் மக்கள் கூடும் இடங்களில் கூட்டம் இல்லாமல் காணப்பட்டது.

இதுகுறித்து வியாபாரிகள், வாகன ஓட்டிகள் உள்பட பல்வேறு தரப்பினரும் கூறும்போது, சுற்றுலா பயணிகளின் வாகனங்க ளுக்கு தடை விதிப்பதால் வணிக ரீதியாக மசினகுடி பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் சுற்றுலா பயணிகள் வருகை குறைந்துள்ளதால் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்றனர்.

## ஆவணம் காணவில்லை

திண்டுக்கல் மாவட்டம் , திண்டுக்கல் மேற்கு வட்டம், குரும்பப்பட்டிகிராமம், 1/61கிழக்கு தெரு,கொட்டப்பட்டி அனைப்பட்டி என்ற முகவரியில் வசித்து வருகின்ற கருப்பணன் மகன் திரு. வேல்முருகன் ( வயது 52 ) ஆகிய எனது கட்சிக்காரர் இதன் மூலம் பொது மக்களுக்கு தெரிவிக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால் ஆவண எண் : 566/1999 மேற்படி ஆவணம் எனது கட்சிக்காரரின் அனுபோகத்தில் உள்ளது. மேலும் இந்த ஆவணத்தில் உள்ள சொத்தை ஈடுகாட்டி VERITAS FINANCE LTDல் கடன் கோரியபோது சொத்தின் அசல் ஆவணம் காணாமல்போனது தெரியவருகிறது. மேற்படி சொத்தின்மீது யாருக்கேனும் உரிமையோ, பின்தொடர்ச்சியோ இருப்பின் நாளது தேதி முதல் 7 தினங்களுக்குள் எழுத்து மூலம் தகுந்த ஆதாரத்துடன் கீழ்க்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தவும். அதற்கு பின்னிட்டு வரும் எந்தவிதமான ஆட்சேபனையும் எனது கட்சிகாரரை எந்தவித வில்லங்கத்திற்கும் உட்படுத்தாது என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

D.KARUPPIAH, B.SC., B.L.,
ADVOCATE & NOTARY 33/24, KALIAMMAN KOVIL STREET,
Y.M.R. PATTY, DINDIGUL DIST.

### வீட்டின் கதவை உடைத்து

# வெள்ளி பொருட்கள் திருடிய 3 பேர் கைது: பைக் பறிமுதல்

தூத்துக்குடி, மே. 9

தூத்துக்குடி மாவட்டம், நாலாட்டின்புதூர் சக்கரத் தாழ்வார்நகரைச் சேர்ந்தவர் முனியசாமி. வெளிநாட்டில் வேலை செய்து வரும் இவரை பார்ப்பதற்காக, அவரது மனைவி சுகாசினி தனது இரண்டு குழந்தைகளுடன் கடந்த மாதம் வெளிநாடு சென்றிருந்தார்.

இந்த நிலையில் பூட்டியிருந்த இவர்களது வீட்டின் கதவு கடந்த ஏப்ரல் 30ம் தேதி உடைக்கப்பட்டு இருப்பதைக்கண்டு அதிர்ச்சியடைந்த அக்கம் பக்கத்தினர் போலீசாருக்குத் தகவல் அளித்தனர்.

தகவல் அறிந்து வந்த நாலாட்டின்புதூர் போலீசார், சுகாசினியை தொடர்பு கொண்டு விசாரித்ததில், வீட்டில் இருந்த 5 வெள்ளி காமாட்சி விளக்குகள் மற்றும் குத்து விளக்குகள் திருடு போனது தெரியவந்தது.

இதையடுத்து கோவில்பட்டி டி.எஸ்.பி. ஜகநாதன் மேற்பார்வையில், இன்ஸ்பெக்டர் காளிமுத்து தலைமையிலான தனிப்படை அமைக்கப்பட்டு தீவிர தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

இந்த நிலையில் நேற்று இடைச்செவல் விலக்கு அருகே தனிப்படை போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது ஒரே இரு சக்கர வாகனத்தில் வந்த 3 பேர் போலீசாரைக் கண்டதும் தப்பியோட முயன்றனர். அவர்களை மடக்கி பிடித்து விசாரித்ததில், அவர்கள் முன்னுக்கு பின் முரணாக பதிலளித்தனர்.

போலீசாரின் தீவிர விசாரணையில், அவர்கள் 3 பேரும் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்தது. கைதான அம்பாசமுத்திரம் அயன்சிங்கம்பட்டி, பேச்சிமுத்து (வயது 19), மேலச்செவல் ரவி(45), கீழச்செவல் ஆறுமுகநயினார்(31) ஆகிய பேரும் முனியசாமி வீட்டின் பூட்டை உடைத்து திருடியதை ஒப்புக்கொண்டனர். இதை தொடர்ந்து அவர்கள் 3 பேரையும் கைது செய்த போலீசார், அவர்களிடமிருந்து திருடப்பட்ட வெள்ளி விளக்குகள் மற்றும் திருட்டுக்கு பயன்படுத்தப்பட்ட இரு சக்கர வாகனத்த பறிமுதல் செய்தனர்.

# தவெக ஆட்சி அமைக்க ஆதரவா? திருமாவளவன் முக்கிய தகவல்

சென்னை, மே. 9

தமிழக சட்டசபை தேர்தலில் விஜய்யின் தவெக 108 இடங்களை கைப்பற்றியது. தவெகவுக்கு காங்கிரஸ் ஆதரவு கொடுத்துள்ள நிலையில், தற்போதுள்ளதவெகவின் பலம் 112 ஆக உள்ளது. ஆட்சி அமைக்க 118 இடங்கள் தேவை என்ற நிலையில், மற்ற கட்சிகள் தவெகவுக்கு இன்னும் ஆதரவு கொடுக்கவில்லை.




தங்களை ஆட்சி அமைக்க அழைக்குமாறு தவெக தலைவர் விஜய், கவர்னர் அர்லேகரிடம் கோரிக்கை விடுத்தார். ஆனால், பெரும்பான்மைக்கு தேவையான 118 எம்.எல்.ஏ.க்களின் ஆதரவு கடிதம் இல்லாமல் ஆட்சிஅமைக்கஅழைக்க முடியாது என கவர்னர் திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார். இதனால் எஞ்சிய 6 இடங்களுக்காக விசிக மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகளிடம் விஜய் ஆதரவு கேட்டுள்ளார். அவர்கள் இன்று முக்கிய முடிவு எடுக்க உள்ளனர்.

இதற்கிடையே, திமுக தங்களது எம்.எல்.ஏ.க்களுடன் ஒருபுறமும், அதிமுக தங்களது எம்.எல்.ஏ.க்களுடன் ஒரு புறமும் தனித்தனியாக ஆலோசனை நடத்தி வருகின்றனர். மேலும், அதிமுக ஆட்சி அமைக்க திமுக ஆதரவு கொடுக்க உள்ளதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன.

இந்த பரபரப்பான அரசியல் சூழலில் விசிக தலைவர் திருமாவளவன் சென்னை வேளச்சேரியில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது தவெகவுக்கு ஆதரவு அளிக்க போகிறீர்களா? என செய்தியாளர்கள் கேள்வியெழுப்பினர். இதற்கு பதிலளித்து அவர் கூறியதாவது;

"தவெகவுக்கு ஆதரவு அளிப்பது குறித்து இன்னும் முடிவு எடுக்கவில்லை. தவெக ஆட்சி அமைக்க ஆதரவு தெரிவிப்பது குறித்து ஆலோசிக்க இன்று மாலை விசிக உயர்நிலைக் குழு கூட்டம் நடைபெறுகிறது. அரசியல் நெருக்கடி குறித்து இணைய வழியாக ஆலோசனை நடைபெற உள்ளது. கட்சி நிர்வாகிகள், தொண்டர்களின் கருத்துகளை அறிய வேண்டியது எனது கடமை. ஆலோசனை முடிந்த பிறகு எங்களது நிலைப்பாட்டை தெரிவிப்போம். நாளைகாலை முடிவு அறிவிக்கப்படும்." இவ்வாறு அவர் பேசினார்.

# கோடை விடுமுறைக்காக பாட்டி வீட்டுக்கு வந்த பள்ளி மாணவிக்கு நேர்ந்த சோகம்

விழுப்புரம், மே. 9

விழுப்புரம் மாவட்டம் கண்டாச்சிபுரம் அருகே உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்த 10 வயதுடைய மாணவி, அதே கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப்பள்ளியில் தற்போது 5ம் வகுப்பு படித்து முடித்துள்ளாள்.

இந்த நிலையில் கோடை விடுமுறையை கொண்டாட கடந்த 10 நாட்களுக்கு முன்பு அந்த மாணவி,

தனது தாயுடன் கண்டாச்சிபுரத்தில் உள்ள தனது பாட்டி வீட்டுக்கு சென்றுள்ளாள். நேற்று காலை மாணவி, அதே பகுதியில் விளையாடிக் கொண்டிருந்தாள். அவளது தாய், வீட்டில் படுத்து தூங்கிக்கொண்டிருந்தார்.

பின்னர் மதியம் 1.30 மணியளவில் மாணவியின் தாய் தூங்கி எழுந்து பார்த்தார். அப்போது அங்குள்ள தெருவில் விளையாடிக் கொண்டிருந்த மாணவியை காணவில்லை. இதனால் அவர், தனது மகளை தேடிப்பார்த்தார். அப்போது அருகில் உள்ள மற்றொரு வீட்டின் ஒரு அறையில் மாணவி எந்தவித அசைவும் இன்றி மயங்கிய நிலையில் கிடந்தாள்.

இதைப்பார்த்து அதிர்ச்சியடைந்த மாணவியின் தாய், உறவினர்கள் அம்மாணவியை தூக்கிக்கொண்டு வெளியே வந்து பார்த்த போது அவள் இறந்திருப்பது தெரியவந்தது. மர்மமான முறையில் இறந்த மாணவியின் உடலை பார்த்து அவளது தாய் மற்றும் உறவினர்கள் கதறி அழுதனர்.

இதுகுறித்து கண்டாச்சிபுரம் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன்பேரில் விழுப்புரம் உதவி போலீஸ் சூப்பிரண்டு ரவீந்திரகுமார் குப்தா மற்றும் கண்டாச்சிபுரம் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணை நடத்தினர். பின்னர் தடயவியல் நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு தடயங்களை சேகரித்தனர். தொடர்ந்து, மாணவியின் உடலை போலீசார் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக முண்டியம்பாக்கம் அரசுமருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் தெருவில் விளையாடிக் கொண்டிருந்த மாணவி, வீட்டிற்குள் எப்படி இறந்து கிடந்தாள் என்ற விவரம் தெரியவில்லை. மாணவியின் உதட்டில் காயம் உள்ளதால் அவளை யாரேனும் பாலியல் பலாத்காரம் செய்வ தற்கான முயற்சியில் கழுத்தை நெரித்துக் கொலை செய்தனரா? அல்லது வேறு ஏதேனும் காரணம் உண்டா? என்பது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

அதோடு அப்பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா பதிவுகள், செல்போன் நெட்வொர்க் உள்ளிட்ட விவரங்களை போலீசார் சேகரித்து சந்தேக நபர்களின் நடமாட்டம் குறித்து விசாரித்து வருகின்றனர். மாணவியின் பிரேத பரிசோதனை அறிக்கை வந்த பிறகே அவளது சாவுக்கான உண்மையான காரணம் என்னவென்று தெரியவரும் என போலீசார் தெரிவித்தனர்.

# அதிமுக திமுக இணைந்து ஆட்சியா? கனிமொழி பதில்

சென்னை, மே. 9

தமிழகத்தில் யார் ஆட்சி அமைக்கப் போகிறார்கள் என்ற பரபரப்பான சூழல் நிலவி வருகின்றது. தவெகவுக்கு பெரும்பான்மை கிடைக்காததால் திமுக கூட்டணிக் கட்சிகளிடம் ஆதரவு கோரியுள்ளது.

திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் எதிர்க்கட்சியாக செயல்படுவதில்தான் விருப்பம் எனத் தெரிவித்திருக்கும் நிலையில், திமுகவின் ஆதரவைப் பெற்று ஆட்சி அமைக்கும் முனைப்பில் அதிமுக பேச்சுவார்த்தை நடத்துவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தவெகவுக்கு ஆதரவு அளிப்பது தொடர்பாக விசிக, இடதுசாரிகள் தனித்தனியே அவர்கள் கட்சி செயற்குழுக்கூட்டங்களில் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளனர். மறுபுறம் கட்சியின் மூத்த நிர்வாகிகளுடன் திமுக தலைவர் ஸ்டாலினும் ஆலோசனை செய்து வருகிறார்.

இந்த நிலையில், அதிமுகவுக்கு திமுக ஆதரவளிக்குமா? என்ற ஏஎன்ஐ செய்தி நிறுவனத்தின் கேள்விக்கு டி.கே.எஸ். இளங்கோவன் பதிலளித்துள்ளார்.

"இது சாத்தியம் இல்லை என்று நான் நம்புகிறேன். ஏனெனில், தமிழ்நாட்டில் திமுகவும் அதிமுகவும் பரம எதிரிகளாக இருக்கின்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, தவெகவுக்கு ஆதரவா? இல்லையா? என்பதை இன்று இரவுக்குள் விசிகவும், இடதுசாரிகளும் அறிவிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தநிலையில், சென்னையில் திமுக எம்.பி,. கனிமொழி செய்தியாளர்சந்திப்பில்கூறியதாவது:

மக்கள் தீர்ப்பு அளித்துவிட்டனர். ஜனநாயகத்தில் இதுதான் மிக முக்கியமான விஷயம். மக்களின் தீர்ப்பை மதிக்க வேண்டும். யாருக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இருப்பினும் மக்கள் தீர்ப்பை நாம் மதிக்க வேண்டும். அதிமுக திமுக கூட்டணி என வரும் ஆதாரமற்ற செய்திகளுக்கு பதிலளிக்க விரும்பவில்லை என்றார்

# கோவையில் ஸ்ரீ கணபதி மார்ட்டின் 3வது கிளை திறப்பு விழா



கோவை மே:09

கோவை மாவட்டம் குனியமுத்தூர் பகுதியில் ஸ்ரீகணபதி மார்ட்ன் 3 வது கிளை திறப்பு விழா நிர்வாக இயக்குனரும் ,நல்லறம் அறக்கட்டளை,நிறுவனத் தலைவர் அன்பரசன் அண்ண பூர்ணா ஹோட்டல் இயக்குனரும் சீனிவாசன்,ஆகியோர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தனர்.இதுகுறித்துநிர்வாகம் தெரிவிக்கையில் புது கலெக்ஷன்களும் திறப்பு விழா முன்னிட்டு மிகக் குறைந்த விலையில் சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தனர்.

### நாகர்கோவிலில்

# சிதம்பர நகர் நியாய விலைக் கடையை மாற்றக் கூடாது எம்எல்ஏ ஆஸ்டினுக்கு அகில இந்திய தமிழர் கழகம் கோரிக்கை

நாகர்கோவில்: மே 9

நாகர்கோவில் மையப் பகுதியில் சிதம்பர நகரில் இயங்கி வரும் நியாய விலைக் கடையை வேறு இடத்திற்கு மாற்றக் கூடாது என்று அகில இந்திய தமிழர் கழகம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக அகில இந்தியதமிழர்கழகத்தின்நிறுவனர் முத்துக்குமார் கூறியுள்ளதாவது:



நாகர்கோவில் மாநகரின் மத்திய பகுதியும், பொது மக்கள் அடர்த்தியாகவசிக்கும்சிதம்பரநகர் பகுதியில் கடந்த 32 வருடங்களாக ஒரே இடத்தில் நியாய விலைக் கடை இயங்கி வருகின்றது. இது அப் பகுதியில் உள்ள மக்களுக்கு வசதியாகவே இருக்கிறது. இந்நிலையில் நியாய விலைக் கடையை கோட்டார் ஆயுர்வேத மருத்துவமனைக்கு அருகில் உள்ள கட்டிடத்திற்கு இடமாற்றம் செய்வதற்கான வேலைகள் நடைப்பெறுவதாக தெரிகிறது.

இந்த நியாய விலைக் கடையை சிதம்பரநகர் பகுதியில் இருந்து மாற்றக் கூடாது என்றும்,

இதனால் மக்கள் பல விதங்களில் பாதிக்கப் படுவார்கள் என்றும் சமூக சேவகரும், அகில இந்திய தமிழர் கழகத்தின் முக்கியஸ்தருமான ஜெபமணி என்பவர், கடந்த சில மாதங்களாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை சந்தித்து முறையிட்டு வருகிறார்.

தற்போது நாகர்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஆஸ்டினுக்கும் இது தொடர்பாக புகார் மனுவும் அனுப்பியுள்ளார். எம்எல்ஏ ஆஸ்டின் நாகர்கோவில் வந்ததும், இது குறித்து நேரில் சந்தித்து ,பொது மக்களின் சிரமங்களை எடுத்து கூறுவோம். பொது மக்களுக்கு சிரமம் ஏற்படாத வகையில் அருகில் உள்ள ஏதாவது கட்டிடத்திற்கு மாற்றுவதற்கானமுயற்சியைஎம்எல்ஏ ஆஸ்டின் மேறக் கொள்ள வேண்டும். கோட்டார் ஆயுர்வேத மருத்துவமனைக்கு அருகில் நியாய விலைக் கடையை மாற்றக் கூடாது.

இவ்வாறு அவர் கூறினார்.

### ஈரோட்டில்

# விஜய் ஆட்சி அமைக்க அனுமதிக்காத கவர்னரை கண்டித்து காங்கிரஸ் ஆர்ப்பாட்டம்

ஈரோடு மே 9

தமிழக வெற்றிக் கழகம் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் தனிப்பெரும் இடங்களை பெற்ற விஜயை ஆட்சி அமைக்க அனுமதிக்காத கவர்னரை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வ பெருந்தகை அறிவித்து இருந்தார். இதன்படி ஈரோடு கருங்கல்பாளையம் காந்தி சிலை அருகே ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஈரோடு மாநகர மாவட்ட தலைவர் ராஜேஷ் ராஜப்பா தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில்வடக்கு மாவட்ட தலைவர் உதய




குமார் தெற்கு மாவட்ட தலைவர் முத்து குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் முன்னாள் எம் எல் ஏ ஆர் எம் பழனிசாமி மாவட்ட முன்னாள்தலைவர்கள் ரவி திருச்செல்வம் பொதுக்குழு உறுப்பினர் மாரியப்பன் 4 ம் மண்டல மண்டல தலைவர் கோபி நிர்வாகிகள் குப்பண்ணா சந்துரு குளம் ஆறுமுகம் முகமது அர்சத் பாட்சா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.